# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 11 வெள்ளிக்கிழமை 24.05.2024 கதிர் 266








# தேசிய வைத்தியசாலையாகத் தரமுயரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை

## யாழில் வைத்து ஜனாதிபதி ரணில் அறிவிப்பு





**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விரைவில் தேசிய வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இதன்மூலம் வடக்கில் சிறந்த சுகாதாரக் கட்டமைப்பை உறுதிப்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.**

2➤

## புதிய கட்டடத் தொகுதியின் திறப்பு விழாவுக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலை ஊழியர் சங்கம் ஆர்ப்பாட்டம்!

### கறுப்புக்கொடிகளும் பறக்கவிடப்பட்டன




பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் தொழிற்சங்கப் போராட்டக் காலத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின்மருத்துவ பீடத்தின் யாழ். போதனா வைத்தியசாலையுடன் இணைந்த புதிய கட்டடத் தொகுதியின்திறப்பு விழாவுக்கு எதிராக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் இன்று கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் இணைச் செயலாளர் த.சிவஷரூபன் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

"பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் சம்பள உயர்வு மற்றும் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து

2➤

## ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் நெருக்கமான ஒருவர் கைது

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் இந்தியாவில் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கையர்களுடன் நெருங்கிய தொடர்புடைய இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பகுதியில் வைத்து மேற்படி நபர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவரான மொஹமட் நஃப்ரான், பாரியளவிலான போதைப்பொருள் வியாபாரியான மாளிகாவத்தை பொட்டா நௌபரின் மகன் என்பது தெரியவந்துள்ளது.

இதனிடையே, இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை ஐ.எஸ் ஐ.எஸ். அமைப்பின் உறுப்பினர்களை விசாரிப்பதற்காக பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னக்கோனின் அறிவுறுத்தலுக்கு அமைய விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவு அடங்களாக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு இலங்கையர்கள் தொடர்பான தகவல்களை இந்தக் குழு கோரியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2➤

## பொருளாதார மாற்றச் சட்டமூலத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் - தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு!



நாடாளுமன்றத்தில் திடீரென சமர்ப்பிக்கப்பட்டுள்ள, பொருளாதார மாற்றச் சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டிந்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய அரசாங்கம் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் மிகவும் கீழ்த்தரமான முறையில் செயற்படுகின்றது.

பொருளாதார முன்னேற்றம் என்று கூறிக்கொண்டு, பாரதூரமான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது. அந்தச் சட்டமூலத்தில் முதலீட்டுச் சபையை இல்லாதொழிப்பதற்கான சரத்து உள்ளடக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வர்த்தக சபையோ, தொழிலதிபர்கள் சங்கங்களோ, தனியார் துறையோ எவரிடமோ கோரிக்கை விடுக்கப்படவில்லை. எனவே இவ்வாறான சட்டமூலத்தை

2➤

## நாடாளுமன்ற தேசிய பட்டியலில் 30 வீதம் பெண்களுக்கே வழங்கப்படல் வேண்டும்!

### சுதர்ஷனி எம்.பி. புதிய பிரேரணை முன்வைப்பு



அரசியலமைப்பின் 22வது திருத்தச் சட்டமூலம் எனும் பெயரில் புதிய பிரேரணையொன்று கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே மூலம் நேற்றுமுன்தினம் (22) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுகின்ற 225 உறுப்பினர்களில், தேசிய பட்டியலிலிருந்து தெரிவாகும் 29 உறுப்பினர்களில் 30 வீதமானவர்கள் பெண்களாக அமைய வேண்டும் என இந்த சட்டமூலத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தல் முறையைத் திருத்துவதற்கான முன்மொழிவையும் அவர் நேற்று சமர்ப்பித்ததோடு, பொதுத் தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்யும் போது அந்தந்த

2➤

**பொருளாதார ........**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டுவருவதற்கான விருப்பம்என்னவென்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். இந்த சட்டமூலத்தை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். குறித்த சட்டத்தால் பாதிக்கப்படும் அனைத்துப் பிரிவினரும் ஒன்றிணைந்து இதற்கு எதிராகச் செயற்படவுள்ளோம்.

தொழிற்சங்கங்களுடன் இது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளோம்" என சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்தார். (04)

**புதிய ........**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எமது தொழிற்சங்கப் போராட்டமானது இம்மாதம் 2ஆம் திகதி நண்பகல் முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் இன்றி சகல பல்கலைக்கழகங்களும் செயற்படாது இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் எமது கோரிக்கைகளைத் தீர்த்துவைத்தலில் எவ்வித அக்கறையுமற்று காலங்கடத்தப்படுகின்றது.

இருந்தபோதிலும் இவ்வேளையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் யாழ். போதனா வைத்தியசாலையுடன் இணைந்த புதிய கட்டடத் தொகுதியானது இன்று ஜனாதிபதி, கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு திறந்துவைக்கப்பட்டமையை யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கண்டிப்பதோடு இந்தச் செயற்பாடு எமது தொழிற்சங்கப் போராட்டத்தை மலினப்படுத்தும் செயற்பாடாகக் காணப்படுகின்றமையால் அதனை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக பிரதான வளாகம் மற்றும் மருத்துவபீடம் என்பவற்றின் வாயிலில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டதோடு, பிரதான வளாக முன்றலில் கண்டன ஆர்ப்பாட்டத்தையும் இன்று காலை 10.30 மணியளவில் நடத்தியிருந்தோம்" – என்றார்.

**தேசிய ........**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்காக யாழ். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத் தொகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

புதிய கட்டடத் தொகுதியில் இரண்டு சத்திர சிகிச்சைக் கூடங்களும், ஒரு சத்திர சிகிச்சைக் கூடமும், எண்டோஸ்கோபி மற்றும் மேமோகிராம், கருவுறுதல் பராமரிப்பு, யூரோடைனமிக் சேவைகள், கேட்போர் கூடம், முதுகலை மையம், மருத்துவப் பணியாளர் அறை மற்றும் கற்பித்தல் வசதிகள் உள்ளன.

இந்தக் கட்டடத் தொகுதி 70 கோடி ஷரூபா செலவில் கல்வி அமைச்சில் நிதி ஒதுக்கீட்டுக்கமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பொருட்களின் விலை அதிகரிப்பால் செலவு அதிகரித்து கட்டடத் தொகுதி இன்னும் நிறைவு பெறாமல் இருப்பதுடன் கட்டடத்தை முழுமையாக நிர்மாணித்துப் பூர்த்தி செய்ய இன்னமும் 13 கோடி ஷரூபா தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

**ஐ.எஸ் ........**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த நால்வரும் தொடர்புகளை வைத்திருந்த இலங்கையர்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, குறித்த நால்வருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த நபர் மாளிகாவத்தையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவினருக்கு விமானப் பயணச்சீட்டுகளை விநியோகித்தமை உள்ளிட்ட பல்வேறு உதவிகளைப் புரிந்தவர் இவர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், சந்தேகநபர் தற்போது பயங்கரவாத விசாரணைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (04)

**நாடாளுமன்ற ......**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சிகளின் செயற்குழுக்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 30 சதவீதமாக உயர்த்த வேண்டும் எனவும் அதனூடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற மகளிர் மன்றத்தின் தலைவி என்ற ரீதியில் இது தொடர்பான பிரேரணைகளை சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே முன்வைத்ததுடன், இரண்டு பிரேரணைகளையும் ஐக்கிய மக்கள் சக்தியின் ரோஹினி கவிரத்ன வழிமொழிந்தார். (ரெம-90)

## ஜனாதிபதி ரணில் வடக்கிற்கு விஜயம்! பல தரப்புடனும் விசேட சந்திப்புகள்

வடக்கு மாகாணத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் விசேட உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய ஜனாதிபதியை கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.

வடக்கிற்கான மூன்று நாள் விஜயமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் உரித்து தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உரிமங்களை வழங்கி வைக்கவுள்ளார்.

அத்தோடு வடக்கில் இளைஞர்களுடன் ஜனாதிபதி விசேட சந்திப்பொன்றிலும் கலந்து கொள்ளவுள்ளதுடன், 10 முக்கிய நிகழ்வுகளில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் இந்த விஜயத்தின்போது விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

## தேசிய டெங்கு தடுப்பு வாரம் பிரகடனம்!

தேசிய டெங்கு தடுப்பு வாரம் வரும் 26ஆம் திகதி முதல் மே முதலாம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மழையுடன் நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ளதால், அந்த அபாயத்தைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி செயலகத்தின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன்படி மே 26ஆம் திகதி முதல் ஜூன் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ள டெங்கு தடுப்பு வாரத்தின் போது கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தெரியப்படுத்த விசேட விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, அரச நிறுவனங்கள், மத ஸ்தலங்கள், புதிய குடியிருப்புகள் போன்றவற்றைச் சுற்றிப் பரவும் டெங்கு அபாயத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கிய சாகல ரத்நாயக்க, இதனைக் கடைப்பிடிக்காதவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய திணைக்களங்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலும் மே மாதத்தில் 1,810 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், ஒன்பது மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (04)

## ஊசிமருந்து ஒவ்வாமையாகி நோயாளி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 30 வயதுடைய நோயாளி ஒருவர் சந்தேகத்திற்கிடமான நுண்ணுயிர் எதிர்ப்பு ஊசியினால் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக உயிரிழந்துள்ளார்.

தீக்காயங்களால் அவதிப்பட்டு வந்த இந்த நோயாளிக்கு வழங்கப்பட்ட 'செபு ரொக்ஸ்மே' என்ற நோயெதிர்ப்பு ஊசியினாலேயே இவ்வாறு இவர் ஒவ்வாமை ஏற்பட்டு உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, காலாவதியான மருந்துகள் தம்மிடம் இல்லை என ஊடகங்களின் முன்னே பேசிக்கொண்டிருப்பதற்கு பதிலாக, தற்போது கையிருப்பில் உள்ள மருந்துகளை உடனடியாகச் சரிபார்ப்பது மிகவும் அவசியம் என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-91)

## மட்டக்களப்பில் கடலில் மூழ்கி ஒருவர் மரணம்

மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள மாங்கேணி கடலில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர். மாங்கேணியைச் சேர்ந்த 41 வயதுடைய அனஸ்டன் ஹாரலஸ் அலேசியஸ் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

## "இலங்கையிலும் அதற்கு அப்பாலும் வரலாறு கண்ட நிகழ்வுகள்" திருமலை தோமஸ் ஜெயேந்திரனின் நூல் அறிமுக விழா





(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருமலை தோமஸ்ஜெயேந்திரனின் படைப்பில் உருவான "இலங்கையிலும் அதற்கு அப்பாலும் வரலாறு கண்ட நிகழ்வுகள்" நூல் அறிமுக விழா திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலக கேட்போர் கூடத்தில், பொது நூலக உதவியாளர் அரசரெட்ணம் அச்சுதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன் போது முதன்மை விருந்தினராக திருகோணமலை நகராட்சிமன்ற செயலாளர் வெ.இராஜ சேகரும், சிறப்பு விருந்தினராக நகராட்சிமன்ற பொது நூலக பிரதம நூலகர் ந.யோகேஸ்வரனும் கலந்து சிறப்பித்தனர்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வின் வரவேற்புரை நகராட்சிமன்ற பொதுநூலக

நூலகரான திருமதி. எம்.எல். றிம்ஸானா நிகழ்த்தினார்.

நிகழ்வில் நூலின் முதற்பிரதியினை திருகோணமலை நகராட்சிமன்றச் செயலாளர் வெ.இராஜசேகர் பெற்றுக் கொண்டார்.

நகராட்சிமன்ற பொதுநூலக வாசகர்வட்ட உறுப்பினரான செல்வி. தாஹிரா சித்திக் நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கியிருந்தார்.



## நிந்தவூர் முன்னாள் தவிசாளருக்கு சமூக சேவைக்கான விருது

(எம்.எப்.நவாஸ்)

நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.ஏ.எம். தாஹிர் - 'சமூக சேவையில் சிறந்த தலைமைத்துவ விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான 'வர்த்தக உலக சர்வதேச விருது' விழா, அண்மையில் கொழும்பு - தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற போது, முன்னாள் தவிசாளர் தாஹிருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.

'சமுதாயத்தில் சிறந்த தலைமைத்துவ விருது எனும் அடையாளத்துடன் வழங்கப்பட்ட இந்த கௌரவம், சமூக சேவையில் தாஹிரின் அர்ப்பணிப்புக்காக கிடைத்துள்ளது.

அரசியலில் களத்திலும் தனிப்பட்ட வகையிலும் மிக நீண்ட காலமாக சமூக சேவையில் ஈடுபட்டுவரும் தாஹிர், நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளராகவும் மூன்று தடவை பதவி வகித்து சமூகப்பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்த நாயக்க உள்ளிட்டோர் இந்நிகழ்வில் அதிதிகளாகக் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தனர்.

அமெரிக்காவை தளமாக கொண்டு இயங்கி வரும் வர்த்தக உலக சர்வதேச அமைப்பானது, 7 நாடுகளை உள்ளடக்கியதாக, வியாபார ரீதியில் சிறந்த அடைவைப்பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் மற்றும் சமூகத்தில் சிறந்த அடைவுகளைப் பெற்ற சாதனையாளர்களுக்கு விருது மற்றும் கௌரவிப்புக்களை இலங்கையிலும் வருடா வருடம் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது.




## திருக்குறளும் சுகநலமும் நூல் வெளியீட்டு விழா

குணராஜா நக்கீரன் எழுதிய திருக்குறளும் சுக நலமும் என்ற நூலின் வெளியீட்டு விழா வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெற உள்ளது

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம் பெற உள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் சி. திருவாகரன் கலந்து கொள்வார்

சிறப்பு விருந்தினர்களாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரனும் யாழ் போதனா வைத்தியசாலைப் பொது மருத்துவ நிபுணர் மருத்துவர் த.பேரானந்தராஜாவும் கலந்து கொள்வர்

கௌரவ விருந்தினர்களாக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனும் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கனும் பங்கேற்பர்

நூலின் ஆய்வுரையை உளமருத்துவ நிபுணர் மருத்துவர் எஸ். சிவதாசும் நயப்புரையை யாழ் போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தாவும் மேற்கொள்ளவுள்ளனர்.

# அழிந்து வரும் பாரம்பரிய நெசவுக் கைத்தொழில்! மிகக் குறைந்த வளங்களுடன் யாழில் தொடர்கிறது



பிரியங்கா சதீஸ்குமார்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்






இன்று எத்தனை பேருக்கு நெசவு பற்றித் தெரியும்? இன்றைய இளம்தலைமுறையினரிடம் இது பற்றிக் கேட்டால் பலர் “தெரியாது!” என்றே பதில் சொல்வார்கள்.

நவீன தொழிநுட்பக் காலத்தில் புதிய புதிய கண்டுபிடிப்புகள் வரும்போதெல்லாம் பழையவை நலிவடைந்து செல்வது ஒன்றும் புதிதல்ல. அந்த வகையில் இந்த நெசவுத் தொழிலும் அழிவடைந்து செல்கின்றது எனலாம்.

உள்ளூார்ச் சமூகப் பண்பாடுகள், பொருளாதார நிலைமைகளை வலுப்படுத்தும் நோக்கிலான தொழில் முனைவாக நெசவுப் பயன்பாடு காணப்படுகின்றது. ஆயினும், மேலைத்தேய மேலாதிக்கம் காரணமாக குறிப்பிட்ட ஆக்கபூர்வமான விடயங்கள் மிகவும் கடுமையான சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றன. அதற்குள் நெசவுத்தொழிலும் உள்ளடங்குகின்றது.

நெசவுப்பண்பாடானது கி.பி 6 ஆம்நூற்றாண்டினுடைய பழைமை வாய்ந்த விடயமாகும். பல வருடங்களுக்கு முன் பழைமை வாய்ந்த குடிசைத் தொழிலாக இது ஆரம்பமாகியது. விஜயன் வருகையும், யுத்த தந்திரமும் கொண்ட காலத்தினைப் பார்க்கும்போது 2500 வருடங்களுக்கு முன் குவேனி நூல் நூற்றுக் கொண்டிருந்ததாள் என்பதை இலங்கைச் சரித்திரம் கூறும் போதே, நெசவு ஆரம்பமாகிவிட்டது எனலாம்.



அதாவது விஜயன் வருகைக்கு முன்பே நெசவின் ஆரம்பம் பற்றி அறிய முடிகின்றது.

‘தறி’ என்பது ஆடை தயாரிக்கப் பயன்படுத்தும் ஒருங்கிணைந்த செயற்பாட்டுக் கருவியாகும். அந்த வகையில் இரண்டு முறையில் நெசவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒன்று கைத்தறி நெசவாகும். இது கைகளினால் நூல் நூற்றலாகும். மற்றையது மின்தறி நெசவாகும். இது மின்சாரத்தைப் பயன்படுத்தி நூல் நூற்றலாகும்.

இன்று இந்த நெசவு நலிவடைந்து செல்லும் அதேவேளையில் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் இன்னமும் இது செயற்பாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில், கோண்டாவில் பகுதியில் நெசவுத்தொழில் செய்யப்பட்டு வருகின்றது. அது தொடர்பான விடயங்களைப் பற்றி யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் நெசவுச் சாலையில் பொது முகாமையாளராகப் பதவி வகிக்கும் சிவகுமாரன் நிரோஜன் கூறிய போது, ‘இந்த நெசவுசாலையானது நெசவாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு 1945 ஆம் ஆண்டளவில் உருவாக்கப்பட்டது. நெசவாளருக்கு நூலைக் கொடுத்து அவர்களிடமிருந்து துணியை வாங்கி விற்பனை செய்யப்பட்டு வந்தது.

மணிக்கூட்டுக் கோபுர வீதியின் அருகில் கிளை ஒன்று திறந்து வைக்கப்பட்டதுடன் யாழ் மாவட்டத்தின் ஏனைய இடங்களில் மையங்களை உருவாக்கி, நெசவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன.

இங்கு ஆரம்பத்தில் 48 சிறிய மின்தறிகளை வைத்து நெசவுப் பொருட்களை உற்பத்தி செய்து வந்தோம். 1967ஆம் ஆண்டு கோண்டாவில் பகுதியில் காணி ஒன்றினை வாங்கி, மின்தறி நிலையமாக அமைத்து, அது இன்றும் இயங்கி வருகின்றது.

இங்கு ஆரம்பத்தில் 48 சிறிய மின்தறிகளை வைத்து நெசவுப் பொருட்களை உற்பத்தி செய்து வந்த நிலையில் பின்னர் ‘12 க்கு 63 ‘ அங்குலம் கொண்ட இயந்திரங்கள் பொருத்தப்பட்டு இயங்கி வந்தன. இதன் பின்னர் 1978 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ‘சைசிங் பிளான்ட்’ எனப்படும் பசையோடு வார்ப்பு போடுகின்ற இயந்திரத் தொகுதி ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் வார்ப்புகள் தயாரித்து உற்பத்தியை மேற்கொண்டு வரப்பட்டது.

1983 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ‘பினிஷிங் பிளான்ட்’ என்ற மாபெரும் தொழிற்சாலை உருவாக்கப்பட்டு அது ஐந்து வருடங்கள் மட்டுமே இயங்கி வந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக மூடப்பட்டது. இன்று இயங்கும் இந்த நெசவுசாலையும் பெரியளவில் பாதிக்கப்பட்டு, சிறியளவிலேயே நெசவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொண்டு வரும் நிலையில் காணப்படுகின்றது. இங்கே தற்போது 15 மின்தறி இயந்திரங்கள், 10 பேருடன் இயங்கி வருகின்றன.

அரசாங்கத்தினால் 2018 ஆம் ஆண்டளவில் ஐந்து ரப்பியர் மின்தறி இயந்திரங்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

சங்கத்தினால் தற்போது பெட்சீற்கள், சறங்கள், துவாய்கள், தலையணை உறைகள், வேட்டிகள், சாறிகள், வைத்தியசாலைத் துணிகள் போன்ற பல நெசவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொண்டு வருகின்றோம்.

இன்று இந்த நெசவு நலிவடைந்து செல்லும் அதேவேளையில் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் இன்னமும் இது செயற்பாட்டில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், கோண்டாவில் பகுதியில் நெசவுத்தொழில் செய்யப்பட்டு வருகின்றது.

எங்களுடைய பெரும்பாலான உற்பத்திகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையானது கொள்வனவு செய்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது’, என்று தெரிவித்தார்.

மேலும் நிரோஜன் கூறுகையில் “எங்களுக்குப் பாரிய சவாலாக இருப்பது மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதாகும். தேவையான நேரங்களில் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வது மிகவும் கடினமாக உள்ளது. கொழும்பிலிருந்து பெறப்படும் இந்த நூல்கள் நேரடியாக இந்தியாவில் இருந்து கிடைக்கப்பெறுமானால் அது நமக்கு நன்மையே”, என்றார். நெசவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் விதம் பற்றி அங்கு பணிபுரியும் பழனி ராஜேஸ்வரி என்பவர் தெரிவிக்கையில், “கொழும்பில் இருந்து நூல் எடுத்து எங்களுக்கு எந்தெந்த டிசைனில் வேண்டுமோ அதற்கேட்டவாறு மெஷினில் கிறில் பண்ணி, ஒவ்வொரு நூலையும் கணக்குப் பண்ணி மெஷினில் வார்ப்பு போடுவோம். அதன்பின் மெஷி னில் கோர்வை பண்ணி துணியாக அடித்துக் கொடுப்போம்.

எங்களுக்கு இந்த நாளில் இவ்வளவு பொருட்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படும் பொழுதெல்லாம் அதை முடித்துத்தான் செல்ல வேண்டிய கட்டாயம் எமக்கு உள்ளது. எனினும் அது கஷ்டமாகத் தெரிவதில்லை”, என்றார்.



இவ்வாறு மூலப்பொருட்கள், மூலதனம், சம்பளம், ஆட்பற்றாக்குறை ஆகியவற்றினது பற்றாக்குறைகள் நீங்குமேயானால்தான் இந்த நிறுவனத்தைக் கொண்டு நடத்துவது சாத்தியமாகும். பாரம்பரிய நெசவுத்தொழிலும் மறைந்து போகாது!

# பனங்காட்டு பட்டிநகர் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பூரணைத் திருக்குளிர்த்தித் திருவிழா

கண்ணகி வழிபாட்டிற்கு பிரசித்தி பெற்ற இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பனங்காடு பட்டிநகரில் குடிகொண்டுள்ள கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசி பூரணை திருக்குளிர்த்தி சடங்கு பெருந்திரளான மக்களின் மத்தியில் இடம்பெற்றது.

கண்ணகி வரலாற்றுடன் தொடர்புடைய கண்டிய மன்னரின் மானியம் பெற்றதும் முக்காவிய புகழ் பெற்றதும் பொற்புறா வந்த காவியம் பாடப்பட்டதுமான இவ்வாலயத்தின் திருக்குளிர்ச்சித் திருக்கதவு திறக்கும் நிகழ்வு 16ஆம் திகதி வழிபாடுகளுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 21ஆம் திகதி வரை விசேட அபிசேக மூன்று காலப்பூசைகளும் இடம்பெற்று 22ஆம் திகதி இரவு நடைபெற்ற கல்யாணக்கால் நடும் நிகழ்வுடனும் நேற்று திருக்குளிர்த்தி இடம்பெற்றது. பக்தர்களின் நேர்கடன் பொங்கல் ஆகிய வற்றுடன் இன்று நடைபெறும் கவடாப்பிட்டி பிள்ளையார் ஆலயப் பொங்கல் மற்றும் ஐயனார், வைரவர், நாகேஸ்வரர் பூசையுடனும் திருவிழா நிறைவுறும்.

ஆலய நிருவாகம் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் ஆர். திரவியராஜ் மேற்பார்வையில் இடம்பெற்ற திருக்குளிர்ச்சி வழிபாடுகளை ஆலய பூசகர் கு.ரவீந்திரநாதன் தலைமையிலான பூசகர்கள் நடாத்தி வைத்தனர்.





# சஹ்வா அறபுக்கல்லூரியில் புதிய அதிபர் பதவியேற்பு

(எம்.எப்.நவாஸ்)

பாலமுனை சஹ்வா அறபுக்கல்லூரியின் பணிப்பாளர் சபை தலைவர் அஷ்ஷேக் இத்ரீஸ் ஹசன் சஹ்வியின் தலைமையில் நேற்று முன்தினம் (22) கல்லூரியில் இடம்பெற்ற புதிய அதிபர் பதவி ஏற்பு நிகழ்வின்போது புதிய அதிபராக அஷ்ஷேக் ஏ.ஆர்.றமீன் - சஹ்வி, மதனி தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இக்கல்லூரியின் பழைய மாணவரான இவர், கடந்த சில வருடங்களாக இங்கு நிறைவேற்று அதிபராகவும் கடமையாற்றியிருந்தார். இவர் பாலமுனை ஏசிஜேயு கிளையின் பொருளாளராகவும் செயலாற்றி வருகின்றார்.

மேலும், இக்கல்லூரியின் பிரதி அதிபராக அஷ்ஷேக் என்.பி.எம். நஜாத் (றஹ்மானி) பதவி ஏற்றுக்கொண்டார். இவர் இங்கு உப அதிபராக கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சஹ்வா அறபுக்கல்லூரியின் பணிப்பாளர் சபையால் வழங்கப்பட்ட இப் புதிய அதிபர் மற்றும் பிரதி அதிபர் நியமனமானது அபுஸ் சஹ்வா அஷ்ஷேக் ஜஎல்எம்.ஹாசிம் சூரி, மதனி ( ஏசிஜேயு - பிரதித்தலைவர்) அவர்களின் பங்குபற்றுதலுடன் பணிப்பாளர் சபை செயலாளர், பொருளாளர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், கல்லூரி விரிவுரையாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# ஆசிரிய ஆலோசகர் மன்சூருக்கு சம்மாந்துறையில் மணிமகுட விழா!



(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய தமிழ்ப் பாட ஆசிரியர்கள் இணைந்து 36 வருட காலம் கல்விச் சேவையாற்றி ஓய்வு பெற்ற தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் இசட்.எம்.மன்சூருக்கு மணிமகுடம் சூட்டும் விழாவை நடாத்தினர்.

சம்மாந்துறை வலய தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.றசீன் தலைமையில் சம்மாந்துறை பழப்பூங்கா (புஷரூட்பார்க்) மண்டபத்தில் நேற்று (23) வியாழக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எம்எச்எம். ஜாபீர், கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.பரமதயாளன் மற்றும் சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்களின் நலன்புரி ஒன்றிய தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி தேசமான்ய வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

முன்னதாக மறைந்த வலயக்கல்விப் பணிப்பாளர் மர்ஹூம் டொக்டர் உமர் மௌலானாவிற்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி பிரார்த்தனை இடம்பெற்றது.

ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் மன்சூர் தொடர்பாக பலரும் உரையாற்ற தொகுத்தளித்த ஏ.பீ.எம்.அஜ்வத் கவிதையாற்றி வாழ்த்துமடல் வாசித்தளித்தார்.

மன்சூரின் அர்ப்பணிப்பான சேவையைப்பாராட்டி பணிப்பாளர் ஜாபீர் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களான சகாதேவராஜா றசீன் ஆகியோர் பொன்னாடை போர்த்திக்கௌரவித்தார்கள்.

11 வருட காலம் ஆசிரியர் பணியையும் 25 வருட காலம் ஆசிரியர் ஆலோசகர் பணியையும் நிறைவு செய்து கடந்த 17 ஆம் திகதி ஓய்வு பெற்ற மன்சூர் நல்லதொரு கவிஞராவார்.

ஆசிரிய ஆலோசகர் மன்சூர் ஏற்புரை நிகழ்த்துகையில், தான் 36 வருடங்களுக்குமேல் கல்விச் சேவையாற்றியதாகவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யாருடனும் முரண்படவில்லை எனவும், மாறாக அனைவரும் ஒத்துழைப்பு நல்கியதாகவும் ஆசிரியர்கள் இணைந்து இவ்வாறான விழாவை எடுத்தது நெகிழ்ச்சியாக இருப்பதாகவும் தெரிவித்து நன்றி கூறினார்.



# இலங்கையில் டெங்கு, மலேரியா, யானைக்கால் நோய்கள் சிறப்பாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன

## உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு




இலங்கையில் டெங்கு, மலேரியா, யானைக்கால் மற்றும் லீஷ்மேனியா ஆகிய நோய்க்கிருமிகளால் பரவும் நோய்கள் தொடர்பாக ஒன்றிணைந்த வெளிப்புற மதிப்பாய்வொன்று இலங்கையிலுள்ள உலக சுகாதார நிறுவன பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, 3 நாட்கள் மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய் விற்கமைய பெறப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்களுடன், உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி மருத்துவர் அலகா சிங் உள்ளிட்ட தூதுக் குழுவினர் சுகாதாரத்துறை செயலாளர் விசேட மருத்துவர் பாலித மஹிபாலவுடன் கலந்துரையாட ஏற்பாடாகியது.

டெங்கு, மலேரியா, யானைக்கால் மற்றும் லீஷ்மேனியா நோய்களை கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைச் சேவைகள் மிகவும் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருவதாக இச்சந்திப்பில் தூதுக்குழுவினர் சுகாதாரத்துறை செயலாளர் பாலித மஹிபாலவிடம் சுட்டிக் காட்டினர்.

இலங்கையில் ஆரம்ப நிலை சுகாதார சேவையை வலுப்படுத்தவும், மக்களுக்கு தரமான சுகாதார சேவைகளை வழங்கவும் சுகாதார அமைச்சு பல புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளதாக சுகாதார செயலாளர் பாலித மஹிபால உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளிடம் இதன் போது சுட்டிக்காட்டினார். டெங்கு, மலேரியா, யானைக்கால் மற்றும் லீஷ்மேனியா நோய்களைக் கட்டுப்படுத்துதல், ஒழித்தல் மற்றும் சிகிச்சை சேவைகளை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

இவ்வாறான மதிப்பாய்வுகள் மூலம் நோய் தடுப்பு, கட்டுப்பாடு, தற்போதுள்ள உபாயங்கள் மற்றும் குறைபாடுகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் திறன் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க முடியும் எனவும் இதன் போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

(ரெம-92)

# காய்கறிகள் மற்றும் பழங்களை இறக்குமதி செய்வதற்காக 120.4 மில்லியன் அ.டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது




## இலங்கை மத்திய வங்கி அறிக்கை

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி, இந்த வருடத்தின் (2024) முதல் மூன்று மாதங்களில் காய்கறிகள் மற்றும் பழங்களை இறக்குமதி செய்வதற்காக 120.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் (2023) இந்தக் காலப்பகுதியில் காய்கறிகள் மற்றும் பழங்களை இறக்குமதி செய்வதற்கு 85.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி, கடந்த ஆண்டின் (2023) இந்த காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் காய்கறிகள் மற்றும் பழங்களை இறக்குமதி செய்வதற்கு 34.8 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் செலவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் படி நடப்பு வருடம் மார்ச் மாதத்தில் மட்டும் காய்கறிகள் மற்றும் பழங்களை இறக்குமதி செய்வதற்கு 47.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ரெம-93)








## ஈரான் ஜனாதிபதி இப்ராஹீம் ரைசிக்கு புத்தளத்தில் அனுதாப கையொப்பம்

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

ஹெலிகொப்டர் விபத்தில் மரணமான ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்காக தமது ஆழ்ந்த அனுதாபங்களை புத்தளத்தில் வாழுகின்ற மக்களும் தெரிவித்து வருகின்றனர்.

புத்தளம் கலாச்சார அமைப்பு ஏற்பாடு செய்திருக்கின்ற அனுதாப கையொப்பங்களை பெறுகின்ற செயல்திட்டம் இன்று (24) காலை 6 மணி முதல் புத்தளம் நுஹ்மான் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கையொப்பங்களை இலங்கையில் உள்ள ஈரான் தூதுவரகத்தின் ஊடாக ஈரான் நாட்டின் பதில் ஜனாதிபதியின் அலுவலகத்திற்கு பாரப்படுத்தப்பட உள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ஈரான் இஸ்லாமிய குடியரசு இலங்கையில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கும் அது போன்று நலிவுற்ற மக்களுக்கான நல நலன் திட்டங்களுக்கும் தொடர்ந்து உதவி வரும் ஒரு நாடு என்பதினால் இந்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக புத்தளம் கலாசார அமைப்பு தெரிவித்துள்ளது.



## கதிர்காமத்தில் இன்று கன்னிக்கால் நடப்பட்டது

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் (ருஹூணு மகா கதிர்காமம்) ஆடிவேல் விழா எசல திரு விழாவிற்கான கன்னிக்கால் அல்லது பந்தல்கால் நடும் நிகழ்வு இன்று (24) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் சுப முகூர்த்தத்துடன் இடம்பெற்றது.

இவ்வாறு 45 நாட்கள் கப்சித்துவாவின் பின்னர், அதாவது எதிர்வரும் ஜூலை 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் முதல் பெரஹெரா திருவிழா ஆரம்பமாகவுள்ளது.

16 நாட்கள் நடைபெறும் இந்த ஊர்வலம் ஜ/லை 21 ஆம் திகதி இரவு இடம்பெற்று ஜ/லை 22 ஆம் திகதி மாணிக்ககங்கையில் நீர் வெட்டு திருவிழாவுடன் நிறைவுபெறும் என ரு/ஹனுமகா கதிர்காமம் ஆலய பஸ்நாயக்க நிலமே திஷான் குணசேகர தெரிவித்தார்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD
PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD
DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!